
# மக்கள் சாசனம்



## 2020

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**76, மவுண்ட் சாலை, கிண்டி, சென்னை – 600 032**

## 1. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நிறுவன அமைப்பு

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974–யினை (மத்திய அரசு சட்டம் 6) அடிப்படையாக கொண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினை 27.02.1982 அன்று தமிழ்நடு அரசு நிறுவியது. சென்னையில் தலைமை அலுவலகத்தை கொண்டுள்ள வாரியம், இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் தலா 7 மண்டல அலுவலகங்களையும், மாவட்ட சுற்றச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் தலா 38 மாவட்ட அலுவலகங்களையும் கொண்டு, மூன்று அடுக்குகளாக செயல்பட்டு வருகிறது. இதைத்தவிர ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இரண்டு பறக்கும் படைகள், சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கி வருகின்றன. மேலும் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையில் உதவிடும் வண்ணம், போதுமான அறிவியல் பணியாளர்களை கொண்டு எட்டு மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களும், எட்டு மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களும் இயங்கி வருகின்றன.

**பார்வை**

- தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது சீரிய கண்காணிப்பு மற்றும் சிறந்த முறையில் மாசு கட்டுப்பாடு சட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் மாநிலத்தின் நீர் நிலைகள், நிலம் மற்றும் சுற்றுப்புறம் மாசடைவதைக் கட்டுப்படுத்தி சுற்றுச் சூழல் எவ்வித சீர்கேடும் அடையா வண்ணம் பாதுகாத்தல்.

**குறிக்கோள்**

- வாரியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு வெளிப்படையான மற்றும் திறமையான நிர்வாகத்தினை செயல்படுத்துதல்.
- முக்கிய நோக்கங்களுக்கான விமர்சனங்களை நேர் மனப்பான்மையுடன் கருத்தில் கொண்டு உரிய சீரமைப்பு முறைகளை மேற்கொள்ளுதல்.
- கணினி உள்ளடக்கிய நவீன தொழில் நுட்பங்களை மேற்கொண்டு சேவையினை தொடர்ந்து மேம்படுத்துதல்.
- பொது மக்கள், தொழில் முனைவோர் ஆகியோரால், சுற்றுச்சூழல் தொடர்பாக எழுப்பப்படும் குறைகளை நிவர்த்தி செய்து மாவட்ட அலுவலகங்கள் மூலம் விரைவான செயல்பாட்டினை மேற்கொள்ளுதல்.
- மாநிலத்தில் முக்கியமான ஆறுகள், ஏரிகள், கடலோரப் பகுதிகள் மற்றும் நீர் ஆதாரங்களில் அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொண்டு நீர் மாதிரிகளை சோதனை செய்து நீரின் தரத்தினை கண்காணித்தல்.
- காற்றின் தரம், நிர்ணயித்த தரஅளவிற்கு உட்படுவதனை உறுதிப்படுத்த முக்கியமான நகரங்கள், தொழில் வளாகங்கள் மற்றும் பெரிய குடியிருப்பு பகுதிகளில் காற்றின் தர ஆய்வு மேற்கொள்ளுதல்.

- நீர், நிலம் மற்றும் காற்று ஆகியவற்றின் மாசினை தடுத்து, கட்டுப்படுத்தி மேற்கொண்டு சீர்படுத்துவதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளித்து, கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் மாசு தடுப்பு தொழில் நுட்பங்களை அறிய செய்து அவர்களின் திறனை மேம்படுத்துவதோடு அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கேற்ற சுத்திகரிப்பு முறையினை அறியும் திறனை வளர்த்தல்.
- பொது மக்கள் மத்தியிலும் / தொழிற்சாலைகளிலும் சுற்றுச் சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்.

**2. தூய்மையான சுற்றுச்சூழலை குடிமக்களுக்கு உறுதி செய்யும் சரத்துகள்**

**சரத்து 21**

இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிப்படை உரிமைகளான வாழ்க்கை உரிமை உத்திரவாதம் மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் (சுத்தமான காற்று மற்றும் நீர் உட்பட) முதலியவற்றிற்கான உத்திரவாதம்.

**சரத்து 48—அ**

சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மற்றும் நாட்டின் காடுகளையும் வன வாழ்க்கையையும் பாதுகாக்க அரசு முனைதல்வேண்டும்.

**சரத்து 51—அ**

காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் வன வாழ்க்கையை உள்ளடக்கிய இயற்கை சுற்றுச்சூழலை பாதுகாத்து, மேம்படுத்துதல் மற்றும் வாழும் உயிரினங்கள் மீது இரக்கம் காட்டுதல் ஒவ்வொரு இந்திய குடிமகனின் கடமையாகும்.

**3. தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் செயல்படுத்தி வரும் மாசு கட்டுப்பாடு சட்டங்கள் மற்றும் விதிமுறைகள்**

சட்டப்பூர்வ அமைப்பாக விளங்கக்கூடிய தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நீர், காற்று மற்றும் நிலத்தில் ஏற்படும் மாசினை கட்டுப்படுத்த அமைக்கப்பட்ட சட்டங்களை செயல்படுத்திவருகிறது.

1. நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974
2. நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
3. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981
4. தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
5. சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986
6. சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986

7. நிலக்கரிச் சாம்பல் பயன்படுத்துதல் அறிவிக்கை, 1999

8. ஒலி மாசு (ஒழுங்கமைவு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 2000

9. மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2001

10. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006

11. தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016

12. மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், 2016

13. திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016

14. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016

15. மின்னணு கழிவு மேலாண்மை விதிகள், 2016

16. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், 2016

17. கடலோர ஒழுங்குமுறை மண்டலம் அறிவிக்கை, 2019

**4. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கிய பணிகள்**

தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வெளிவரும் கழிவு நீர் / நச்சுப்புகை கண்காணித்தல், சுத்திகரிப்பு அமைப்புகள் மற்றும் நீர் ஆதாரங்களை கண்காணித்தல் போன்ற முக்கிய பணிகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் செய்து வருகிறது.

தனக்கான கடமைகளை செயல்படுத்தி வரும் வாரியம், நீர், காற்று மற்றும் நில மாசு தொடர்பான தகவல்களை சேகரித்து பரவலாக்குவதோடு மட்டுமல்லாமல், மனித கழிவு நீர் / தொழிற்கழிவு நீர் மற்றும் நச்சுப்புகை வெளியேற்றத்திற்கான வரையறைகளையும் வகுத்து வருகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திரவ கழிவு / வாயு கழிவு / திட கழிவு முதலியவற்றை சுத்திகரிப்பதற்கான தூய்மையான தொழில்நுட்பங்களை உறுதி செய்கிறது.

| **அலுவலகம்** | **இசைவாணை / அங்கீகாரம் மேலாண்மை** | **பிற பணிகள்** |
|---|---|---|
| தலைமை அலுவலகம் | i. அதிக மாசு ஏற்படுத்தும் 17 வகை தொழிற்சாலைகள் (பெரிய மற்றும் நடுத்தர வகை), சிவப்பு பெரிய மற்றும் சிவப்பு நடுத்தர வகை தொழிற்சாலைகளுக்கு, புதிய இசைவாணை மற்றும் புதுப்பிக்கப்பட்ட இசைவாணையினை | i) மண்டல, மாவட்ட அலுவலகங்கள் மற்றும் ஆய்வகங்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்தல்<br>ii) பணியாளர்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பானவற்றை கையாளுதல்<br>iii) திட்டம் மற்றும் மேம்பாடு தொடர்பான வேலைகளை மேற்கொள்ளுதல்<br>iv) வாரியத்தின் சட்ட ரீதியாளன |

| | | |
|---|---|---|
| | வழங்கவும், தொழிற்சாலைகளுக்கு முகாற்திரம் கோரல் கடிதம் வழங்க, வழிகாட்டுதல்கள் வழங்க, தொழிற்சாலை மூட மற்றும் மூடப்பட்டவைகளை திறக்க போன்ற அனைத்து பணிகளையும் மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப பிரிவு.<br>ii. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கான, இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையினை பராமரித்தல்.<br>iii. கழிவுகள் மேலாண்மை விதிகளின் கீழ் அங்கீகாரங்களை வழங்குதல் | பிரச்சனைகளை கையாளுதல்<br>v) சுற்றுச்சூழல் பயிற்சி மையம்<br>vi) அம்மா அழைப்பு மைய புகார்கள், முதலமைச்சர் தனிப்பிரிவு மைய புகார்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்ட விண்ணப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய வாரியத்தின் புகார் மையத்தினை மேலாண்மை செய்தல்.<br>vii) வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள காற்று தர கண்காணிப்பு மையம், நீர் தர கண்காணிப்பு மையம் ஆகிய இரண்டையும் பராமரித்தல்.<br>viii) வாரியத்தின் உள்கட்டமைப்பினை உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் தக்கவைத்தல். |
| மண்டல அலுவலகம் | மண்டல அளவிலான இசைவாணை அனுமதி குழு (ம.அ.இ.அ.கு) கூட்டங்கள் மூலம், சிவப்பு பெரிய, ஆரஞ்சு பெரிய, ஆரஞ்சு நடுத்தரம் மற்றும் பச்சை பெரிய வகை தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்குதல் | அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணித்தல் |
| மாவட்ட அலுவலகம் | i. மாவட்ட அளவிலான இசைவாணை அனுமதி குழு (மா.அ.இ.அ.கு) கூட்டங்கள் மூலம், ஆரஞ்சு சிறிய, பச்சை சிறிய மற்றும் பச்சை நடுத்தர வகை தொழிற்சாலைகளுக்கு | i) மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணித்தல்<br>ii) மாதிரிகள் சேகரித்தல்.<br>iii) புகார்களை விசாரித்தல்<br>iv) விதி மீறும் |

| | | |
|---|---|---|
| | இசைவாணை வழங்குதல்<br>ii. சிவப்பு சிறிய, ஆரஞ்சு மற்றும் பச்சை வகையினை சார்ந்த அனைத்து தொழிற்சாலைகளுக்கும் இசைவாணையினை புதுப்பித்தல் | தொழிற்சாலைகளிடம் முகாந்திரம் கோரல்<br>v) சட்ட ரீதியான நடப்பாணைகணை முன்னெடுத்தல்<br>vi) பொது மக்கள் கேட்புரை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்<br>vii) மாவட்ட அளவிலான பிற பிரச்சினைகள் |
| ஆய்வகங்கள் | | i. தொழிற்கழிவு மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல்<br>ii. சுற்றுப்புற காற்று மற்றும் தொழிற்சாலை புகைபோக்கியின் நச்சுபுகை ஆகியவற்றை பகுப்பாய்வு செய்தல்<br>iii. அதிக மாசடைந்த பகுதிகள் மற்றும் முக்கிய நகரங்களின் சுற்றுப்புற காற்று தரத்தினை கண்காணித்தல்<br>iv. நீர் ஆதாரங்களின் தரத்தினை கண்காணித்தல் |

## 5. தொழிற்சாலைகளின் வகைப்பாடு மற்றும் இசைவாணை மேலாண்மை

### 5.1. தொழிற்சாலை வகைகள்

இசைவாணைகளை மேலாண்மை செய்வதற்கும், தொழிற்சாலைகள் வெளியேற்றும் தொழிற்கழிவுகள் மற்றும் நச்சுக்கழிவுகளை சுத்திகரிக்க அமைக்கப்பட்ட மாசு தடுப்பு சாதனங்களை கண்காணிக்கவும், தொழிற்சாலைகளின் மாசு ஏற்படுத்தும் திறன் அவற்றின் மொத்த நிலையான சொத்து மதிப்பு ஆகிய இரண்டின் அடிப்படையிலும் தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் தொழிற்சாலைகள் சிவப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை எனவும் பெரியது, நடுத்தரம் மற்றும் சிறியது எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| மொத்த நிலையான சொத்து மதிப்பின் அடிப்படை–யிலான வகைப்பாடு | மொத்த நிலையான சொத்து மதிப்பு (கோடியில்) | மாசு ஏற்படுத்தும் திறன் அடிப்படையில் | | | |
|---|---|---|---|---|---|
| | | சிவப்பு | ஆரஞ்சு | பச்சை | வெள்ளை |
| பெரியது | > 10 | அதிக மாசு ஏற்படுத்துபவை | மிதமான மாசு ஏற்படுத்துபவை | குறைந்த மாசு ஏற்படுத்துபவை | மாசு ஏற்படுத்தாதவை |
| நடுத்தரம் | 5-10 | | | | |
| சிறியது | < 5 | | | | |

மேலும், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட வகையின் அடிப்படையில், அதிக மாசு ஏற்படுத்தும் சில தொழிற்சாலைகள் 17 வகை தொழிற்சாலைகளின் பட்டியலில் கொண்டுவரப்பட்டுள்ளன.

மாவட்ட அளவிலான இசைவாணை அனுமதி குழு (மா.அ.இ.அ.கு) கூட்டங்கள் மூலம், ஆரஞ்சு சிறிய, பச்சை சிறிய மற்றும் பச்சை நடுத்தர வகை தொழிற்சாலைகளுக்கு நிறுவ / இயக்க புதிய இசைவாணை வழங்குதல், நிறுவ / இயக்க வழங்கப்பட்ட இசைவாணையின் கால அளவினை நீட்டிப்பு செய்தல் மற்றும் விரிவாக்கத்திற்கான இசைவாணையினை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சிவப்பு சிறிய, ஆரஞ்சு மற்றும் பச்சை வகையினை சேர்ந்த அனைத்து தொழிற்சாலைகளுக்கும் இசைவாணையினை புதுப்பிக்கவும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**5.2 வாரியத்தின் இசைவாணை வழங்கும் முறை**

நீர் மற்றும் காற்று விதிகளின் கீழ் தேவைக்கேற்ப (புதிய மற்றும் ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகள்) தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், இயக்குவதற்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையை பெறவேண்டியுள்ளது. தமிழ்நாடு அரசின் இ–கவர்னன்ஸின் ஒரு பகுதியாகவும், அதிகார அமைப்பிற்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே ஒரு பிணைப்பினை ஏற்படுத்தும் நோக்கத்தோடும், இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை 19.01.2015 முதல் இயங்கி வருகிறது.

தொழில் முனைவோர் இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிக்கும் முறைமை (OCMMS) மூலமாக tnocmms.nic.in. என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து

இசைவாணை பெறுதல் வேண்டும். இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை என்பது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அடிப்படை பணிகளில் ஒன்றான இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணித்தலுடன் இணைந்து தாமாகவே இயங்கக் கூடிய ஒரு மென்பொருள் அமைப்பாகும். தொழிற்சாலை நிறுவுவதற்கும், இயக்குதலுக்கும் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்கள் இம்முறைமையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும், இதன்மூலம் இசைவாணைப் புதுப்பித்தல், ஆவணங்கள் பதிவேற்றல், இணையதள வழியாக இசைவு கட்டணம் செலுத்துதல், இணையதள வழியாக விளக்கங்கள் அளித்தல் மற்றும் விண்ணப்பத்தின் நிலையினை தெரிந்துகொள்ள முடியும். தொழில் முனைவோருக்கு உதவும் வகையில் இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிக்க அனைத்து மாவட்டங்களிலும் உதவி மையத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உருவாக்கி இயக்கி வருகிறது.

**5.2.1 தொழிற்சாலை நிறுவுவதற்கான இசைவாணை (CTE)**

விண்ணப்பங்களை முழுவடிவில் சமர்ப்பித்தப்பின் பரிசீலினை செய்து வாரிய அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய குழு கூட்டத்தில் வைத்து முடிவெடுக்கப்பட்டு தொழிற்சாலை நிறுவுவதற்கான இசைவாணை இணையதளவழி மூலம் வழங்கப்படும்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ன் படி 38 வகையான தொழிற்சாலைகள் அதன் வகைக்கேற்ப இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் / தமிழக அரசின் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறவேண்டும் (சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–யினை காண்க). இவ்வாறு சுற்றுச்சூழல் அனுமதி பெற்றபிறகு தொழிற்சாலையின் அமைவிடம் உகந்ததாயிருப்பின், இதர அனைத்து விவரங்களையும் தொழிற்சாலையிடமிருந்து பெற்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிறுவுவதற்கான இசைவாணையை வழங்கும். கடல் சார் ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019–ன் கீழ் வரும் தொழிற்சாலை திட்டங்களாக இருந்தால், அவை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு விண்ணப்பிப்பதற்குமுன் கடல்சார் தேசிய / மண்டல மேலாண்மை குழுமத்திடம் அனுமதி பெற வேண்டும். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாவட்ட கடல்சார் மண்டல மேலாண்மை குழுமத்தில் ஒருங்கிணைப்பாளர் ஆவார்.

வாரிய நடப்பாணை எண். 5 தேதி: 02.08.2016யின் அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் நிறுவுவதற்கான இசைவாணையின் கால அளவு

| திட்டங்கள் | கால அளவு |
|---|---|
| அனைத்து சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு திட்டங்கள் | 7 ஆண்டுகள் (1 கட்டணம்) |
| அனைத்து சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அல்லாத திட்டங்கள் | 5 ஆண்டுகள் (1 கட்டணம்) |

**5.2.2. தொழிற்சாலை இயக்குவதற்கான இசைவாணை (CTO)**

தொழிற்சாலைகள் இயக்குவதற்கான இசைவாணையை பெறுவதற்கு, தொழிற்சாலையினை இயக்குவதற்கு 2 மாதங்கள் முன்னரே விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இணையதளவழி (OCMMS) வாயிலாக சமர்ப்பித்தல் வேண்டும். நிறுவுவதற்கான இசைவாணையில் உள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என வாரிய பொறியாளர்களின் ஆய்விற்கு பிறகு உரிய குழு கூட்டதில் வைக்கப்பட்டு இயக்குவதற்கான இசைவாணை வழங்கப்படும்.

வாரிய நடப்பாணை எண்: 5 தேதி: 02.08.2016 அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் இயக்குவதற்கான இசைவாணையின்கால அளவு

| சிவப்பு | ஆரஞ்சு | பச்சை |
|---|---|---|
| 5 ஆண்டுகள் (5 கட்டணம்) | 10 ஆண்டுகள் (5 கட்டணம்) | 14 ஆண்டுகள் (7 கட்டணம்) |

**5.2.3 விண்ணப்பங்களை பரிசீலிக்க வாரியம் எடுத்துக் கொள்ள வேண்டிய கால அளவு**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளை நிறுவ மற்றும் இயக்க பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் கால அளவினை நிர்ணயித்துள்ளது. அதன்படி, சிவப்பு வகையில் பெரிய மற்றும் நடுத்தர பிரிவுகளுக்கு அதிகபட்சமாக 45 நாட்களும், சிவப்பு சிறிய, ஆரஞ்சு மற்றும் பச்சை வகைகளுக்கு அதிகபட்சமாக 30 நாட்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**5.2.4 இசைவாணை புதுப்பித்தல்:**

தொழிற்சாலைகள் இசைவாணை கட்டணத்துடன் இசைவாணை புதுப்பித்தலுக்கான கோரிக்கை கடிதத்தை அனுப்பி இணையதளம் மூலமாக இசைவாணையை புதுப்பித்துக்கொள்ளலாம். மேலும், தொழிற்சாலைகள் மாசு தடுப்பு சாதனங்களை பொருத்தி, இயக்கி வாரிய தர அளவீடுகளை அடைந்துள்ளனவா என்ற மதிப்பீட்டிற்குப்பின் இசைவாணை புதுப்பிக்கப்படும். இவை, கள ஆய்வறிக்கை மற்றும் முந்தைய கழிவுநீர் / புகை மாதிரிகளின் பகுப்பாய்வு அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நடைபெறுகிறது.

மேலும், முன்னர் வழங்கப்பட்ட இசைவாணையின் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றிவிட்டதாக சிவப்பு சிறிய, ஆரஞ்சு மற்றும் பச்சை வகையின் அனைத்து பிரிவு தொழிற்சாலைகள் உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில், வாரியம் அவற்றை ஆய்வு செய்யாமலேயே இணைய வழியில் தானியங்கி முறையில் இசைவாணையினை புதுப்பித்து (auto renewal of consent) வழங்குகிறது.

விதி மீறி சட்டத்திற்கு புறம்பாக செயல்படும் தொழிற்சாலைகளுக்கு எதிராக முகாந்திரம் கோருதல், அவற்றின் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல், மூடுதல் மற்றும் மின் இணைப்பினை துண்டிக்க வழிகாட்டுதல்கள் வழங்குதல் போன்ற பணிகளை வாரியம் செய்து வருகிறது.

கொத்தாக இருக்கும் சிறிய ரக தோல் பதனிடும் தொழிற்சாலைகள், ஜவுளி சாய மற்றும் சலவை தொழிற்சாலைகள், உணவகங்கள் மற்றும் மின்முலாம் பூசும் தொழிற்சாலைகள் போன்றவற்றிற்கான பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதில் வாரியம் முக்கிய பங்காற்றி வருகிறது.

**6. தொழிற்சாலைகளின் அமைவிடத்திற்கான கட்டுப்பாடுகள்**

தொழிற்சாலைகளின் அமைவிடம் ஏற்றதா என ஆய்வு செய்த பிறகே இசைவாணை வழங்கப்படுகிறது. அரசு ஆணை எண்.**213** சுற்றுச்சூழல் மற்றும் வனம் (EC-1) நாள்.**30.03.1989–**ன்படி, இவ்வாணையில் குறிப்பிட்டுள்ள அதிக மாசு ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலைகளை இவ்வாணையின் பட்டியலில் குறிப்பிட்டுள்ள நீர் நிலைகளை சுற்றி **1** கி.மீட்டர் சுற்றளவிற்குள் அமைக்க அனுமதிக்கப்படுவதில்லை. அரசு ஆணை எண்.**127** சுற்றுச்சூழல் மற்றும் வனம் (EC-3) நாள்.**08.05.1998–**ன்படி இவ்வாணையின் பட்டியலில் உள்ள குறிப்பிட்ட ஆறுகளைச் சுற்றி **5** கி.மீட்டர் சுற்றளவிற்குள் முதலில் குறிப்பிட்ட அரசாணையில் சொல்லப்பட்டுள்ளஅதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை அமைக்க அனுமதிப்பதில்லை.

**அரசு ஆணை 213–ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள்**

1. ஆல்கஹால் தொழிற்சாலைகள்
2. தோல் தொழிற்சாலைகள், ஜவ்வரிசி, சர்க்கரை, பால் மற்றும் வஜ்ஜிரம்
3. உரம்
4. கூழ் மற்றும் காகிதம் (செரிமானியுடன்)
5. இரசாயன தொழிற்சாலைகள் – சுத்திகரிப்பிற்கு முன்னர் காற்று, நீர் மற்றும் நிலத்தை மாசுபடுத்தும் கழிவுநீரை வெளியேற்றும் இரசாயனங்கள் மற்றும் அவற்றின் வேதியியல், இரசாயன, உயிரியல் மாற்றங்களினால் சுற்றுச்சூழலின் தரத்தினை பாதிக்கக்கூடிய.
6. பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைகள்
7. ஜவுளி சாய தொழிற்சாலைகள்
8. எஃகு ஆலைகள் (Electroplating Heat Treatment etc.,)
9. செராமிக்ஸ்
10. அனல் மின் நிலையம் – இயற்கை வாயு / LNG / CNG / Naptha / Biomass போன்ற எரிபொருள் பயன்பாடு அல்லாமல்.
11. அடிப்படை மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள்
12. பூச்சிக்கொல்லி
13. கல்நார்
14. வார்ப்பட தொழிற்சாலைகள்

அரசு ஆணை எண் 127, சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை நாள் 08.05.1998–ன் படி சில குறிப்பிட்ட ஆறுகளிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வார்பட தொழிற்சாலைகள் அமைக்க தமிழ் நாடு அரசு தடை விதித்து இருந்தது. வார்பட தொழிற்சாலைகள் தற்போது மாசு தடுப்பு சாதனங்களில் நவீன தொழில் நுட்பங்களை புகுத்தியுள்ளது. வார்பட தொழிற்சாலைகள் காற்று மற்றும் நீர் நிலைகளில் மாசு எற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று நிபுணர் குழு வழங்கிய ஆய்வு அறிக்கை அடிப்படையில் குறிப்பிட்ட சில ஆறுகளிலிருந்து 5 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வார்பட தொழிற்சாலைகள் அமைக்க இருந்த தடையை நீக்கி தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 7. கழிவு மேலாண்மை தொடர்பான அறிவிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்

- தமிழ்நாட்டில் உள்ள தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின், மொத்த எண்ணிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கணக்கிட்டுள்ளது. சுத்திகரிப்பு, சேமித்து, அகற்றும் வசதி கொண்ட ஆலைகளில் (TSDF) அப்புறப்படுத்துதல், மறுசுழற்சி செய்தல், சிமெண்ட் தொழிற்சாலைகளின் முன்செயலாக்கு (co-processing) முறை மூலம் பயன்படுத்தல் போன்ற பாதுகாப்பான வழிமுறைகளை பயன்படுத்தி, தீங்கு விளைவிக்கும் கழிவுகளை வாரியம் அப்புறப்படுத்தி வருகிறது.
- தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகளின் மொத்த எண்ணிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கணக்கிட்டுள்ளது. மருத்துவக் கழிவுகளை அப்புறப்படுத்துவது தொடர்பாக, அனைத்து மருத்துவமனைகளும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுடன் (CBMWTF) ஒப்பந்தம் செய்துள்ளன. உயர் அழுத்த நீராவி மூலம் சுத்திகரிக்கும் கருவி, துகளாக்கும் கருவி, எரிப்பான், பயன்படுத்தப்பட்ட ஊசிகளை புதைக்கும் குழிகள் போன்றவைகள் இந்நிலையங்களில் உள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் 14 பொது மருத்துக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. அவற்றில் 11 இயக்கத்தில் உள்ளன, 3 நிறுவப்பட்டு வருகின்றன.
- மின்னணு கழிவுகள் மேலாண்மைக்கென வாரியம் பல முதற்கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மின்னணு கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2016–ன் கீழ் மின்னணு கழிவுகளை பிரித்தெடுக்கும் 23 தொழிற்சாலைகளுக்கும், மின்னணு கழிவுகளை மறுசுழற்சி செய்யும் ஒரு (1) தொழிற்சாலைக்கும், மின்னணு கழிவுகளை புதுப்பிக்கும் ஒரு (1) தொழிற்சாலைக்கும், வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- நாளொன்றிற்கு 5 மெட்ரிக் டன்னிற்கு மேல் திடக்கழிவுகளை உற்பத்தி செய்யும் 15 மாநகராட்சிகள், 119 நகராட்சிகள் மற்றும் 84 பேரூராட்சிகளுக்கு, திடக்கழிவுகளை உரமாக்க வாரியம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016 விதி13–ன் படி, வாரியம் 91 பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களுக்கும், 98 பிளாஸ்டிக் மறுசுழற்சி தயாரிப்பாளர்களுக்கும், 8 பல அடுக்கு பிளாஸ்டிக் தயாரிப்பாளர்களுக்கும் மற்றும் மக்கும்வகை பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் 7 தொழிற்சாலைகளுக்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986, பிரிவு 5–ன் கீழ் ஒரு முறை பயன் படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களின் மீது 01.01.2019 முதல் தடை என்ற அறிவிப்பை தமிழக அரசு தனது 25.06.2018 நாளிட்ட அரசாணை எண் 84ல் வெளியிட்டது. இந்த அறிவிப்பின்படி பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பது, சேமித்து வைப்பது, விநியோகிப்பது, போக்குவரத்து செய்வது, விற்பது, உபயோகிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ஒரு முறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எரியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் மீதான தடையினை செம்மையாக செயல்படுத்த, பல சட்ட ரீதியான நடவடிக்கைகளையும், தனது சந்தாதாரர்கள் மூலமாக வாரியம் மேற்கொண்டுள்ளது.

**8. பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள்**

வாரிய பணியாளர்கள், தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளை சார்ந்த அதிகாரிகள் ஆகியோருக்கு பயிற்சி அளிக்கும் நோக்கத்தோடு, சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தினை வாரியம் நிறுவியுள்ளது. தனது அனைத்து சந்தாதாரர்களுக்கும் இடையே, சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும் வாரியம் ஏற்படுத்தி வருகிறது. முக்கிய சுற்றுச்சூழல் பிரச்சனைகளை மையப்படுத்தி, முக்கியத்துவத்தினை எற்படுத்த, சுற்றுச்சூழல் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச தினங்களில் வாரியம் பல விழிப்புணர்வு நடவடிக்கைகள், ஊர்வலங்கள் போன்றவற்றை, சீரான கால இடைவெளியில் நடத்தி வருகிறது. சுற்றுச்சூழல் பிரச்சனைகள் மற்றும் செய்திகளை உள்ளடக்கிய செய்தி மடல், துண்டு பிரசுரங்கள் மற்றும் கையேடுகளையும், பிரசுரித்து வருகிறது.

**9. முக்கிய வாரிய–பொது மக்கள் இடைமுக நடவடிக்கைகள்**

**9.1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005**

தமிழக அரசின் ஆணையை தொடர்ந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளரை மேல்முறையீட்டு ஆணையராகவும், தலைமை அலுவலகத்தில் உள்ள இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளரை பொது தகவல் அதிகாரியாகவும் மாவட்ட அளவில் உள்ள 38 மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களை மாவட்ட பொது தகவல் அதிகாரிகளாகவும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் தகவல் கோருபவர்களுக்கு தகவல் அளிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 9.2. குறைதீர்வு மையம்

பொது மக்கள், பல வகை அமைப்புகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் நீர், காற்று மற்றும் ஒலி மாசு தொடர்பான புகார்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க, இணைய வழி செயல்படும் குறை தீர்வு மையம் ஒன்றினை வாரியம் அமைத்துள்ளது. முதலமைச்சர் தனிப்பிரிவு புகார்களுக்கு 15 நாட்களுக்குள் பதிலளிக்கவும், அம்மா அழைப்பு மைய புகார்களுக்கு 7 நாட்களுக்குள் பதிலளிக்கவும், தனி பிரிவான இந்த மையத்தினை வாரியம் தனது தலைமை அலுவலகத்தில் அமைத்துள்ளது.

### 9.3.பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம்

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006–ன் படி சில வகை தொழிற்சாலை திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி அதன் அளவை பொருத்து இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திடமிருந்தோ அல்லது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்தோ அனுமதி பெறவேண்டும். உரிய அறிவிக்கையை வெளியிட்டு மாவட்ட ஆட்சியரின் தலைமையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பொது மக்களிடம் இத்திட்டம் குறித்த கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டும். இக்கூட்டம் நடத்தியபின்அதன் அறிக்கையை இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு அல்லது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

### 9.4.தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் நீங்களும்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெறுவதற்கான பல்வேறு சுற்றுச்சூழல் விதிகளையும், நடைமுறைகளையும் தொழில்முனைவோர் அறிந்து கொள்ள வாரியம், “தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் நீங்களும்” என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளது. அதன் மென் நகலை www.tnpcb.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### 9.5.தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய வலைதளங்கள்

வாரியத்தின் திட்டங்கள், வாரிய கூட்டங்கள், மேலாண்மை தொடர்பான செய்திகள், வழங்கப்பட்ட விருதுகள், தொழிற்சாலைகளின் கழிவு வெளியேற்றத்தினை நிகழ்நிலையில் கண்காணித்தல் மற்றும் தொர்பு விபரங்கள் போன்ற வாரியம் தொடர்பான அனைத்து தகவல்களையும் (www.tncpcb.gov.in) என்ற தனது வலைதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது. மேலும், பிளாஸ்டிக் மாசு தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்களை வீரியப்படுத்த, www.plasticpollutionfreetn.org என்ற பிரத்யேக வலைதளத்தினை வாரியம் தொடங்கியுள்ளது. மேலும், முகநூல், டுவிட்டர், யூடியூப், லிங்கிடுஇன், பின்ட்ரஸ்ட் போன்ற சமூக ஊடகங்களிலும், பிளாஸ்டிக் தடை விழிப்புணர்வு நடவடிக்கைகளை வாரியம் செய்து வருகிறது.

## 10. தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய அலுவலகங்கள் மற்றும் ஆய்வகங்களின் இருப்பிடம்

| தலைமை அலுவலகம், சென்னை | |
|---|---|
| **சென்னை**<br>76. மவுண்ட்சாலை,<br>கிண்டி,<br>சென்னை – 600 032 | தொலைபேசி : 044–22353134 முதல் 22353142வரை<br>நிகரி: 044 –22353068<br>மின்னஞ்சல்: tnpcb-chn@gov.in<br>இணையதளம்: www.tnpcb.gov.in |
| **இணைதலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும் சென்னை மண்டல அலுவலகம் (கண்காணிப்பு)** | |
| சென்னை<br>முதல் தளம், 950/1, பூந்தமல்லி நெடுஞ்சாலை,<br>அரும்பாக்கம், சென்னை – 600 106 | தொலைபேசி : 044–26880219<br>மின்னஞ்சல் : jceechennai@gmail.com |
| **சென்னை மண்டல அலுவலகத்தின் ஆளுகையின் கீழ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் இயங்கும் மாவட்ட அலுவலகங்கள்** | |
| சென்னை<br>முதல் தளம், 950/1, பூந்தமல்லி நெடுஞ்சாலை,<br>அரும்பாக்கம், சென்னை – 600 106 | தொலைபேசி : 044–26223603<br>மின்னஞ்சல்: jceechennai@gmail.com |
| அம்பத்தூர்<br>77–A, தெற்கு நிழற் சாலை,<br>அம்பத்தூர் தொழிற்பேட்டை,<br>சென்னை – 600 058 | தொலைபேசி : 044–2688130<br>மின்னஞ்சல்: deeambattur@gmail.com |
| திருவள்ளூர்,<br>திருவள்ளூர் மாவட்டம்<br>பிளாட் எண், 41, முதல் தெரு,<br>நீதிபதிகள் காலனி, திருவள்ளூர் 602 001 | தொலைபேசி : 044–27664425<br>மின்னஞ்சல்: tncb.tlr@gmail.com |
| மறைமலைநகர்<br>மறைமலை அடிகளார் தெரு.<br>நகராட்சி அலுவலகம் அருகில், மறைமலைநகர்,<br>சென்னை –603 209 | தொலைபேசி : 044–27454422<br>மின்னஞ்சல்: tnpcbmmnagar@gmail.com |
| ஸ்ரீபெரும்புதூர்<br>பிளாட் எண். CP –5B. சிப்காட் தொழில் வளர்ச்சி | தொலைபேசி : 044–27174524<br>மின்னஞ்சல்: |

| | |
|---|---|
| மையம், வண்டலூர், வாலாஜாபாத் சாலை, ஒரகடம்,<br>ஸ்ரீபெரும்புதூர் தாலுகா,<br>காஞ்சிபுரம் மாவட்டம் – 603 109 | tnpcboragadam@gmail.com |
| கும்மிடிப்பூண்டி<br>EPIP கட்டிடம் (AO பிளாக்), சிப்காட் தொழில் வளாகம், கும்மிடிப்பூண்டி – 601 201,<br>திருவள்ளூர் மாவட்டம் | தொலைபேசி : 044–27922465<br>மின்னஞ்சல்:<br>deegummidipoondi@gmail.com |
| **இணைதலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும் வேலூர் மண்டல அலுவலகம் (கண்காணிப்பு)** | |
| வேலூர்<br>ஆக்ஸிலியம் கல்லூரி சாலை,<br>(ஆக்ஸிலியம் கல்லூரி எதிரில்)<br>காந்தி நகர், வேலூர் – 632 006 | தொலைபேசி : 0416–2242120<br>மின்னஞ்சல்: tnpcbjceevlr@gmail.com |
| **வேலூர் மண்டல அலுவலகத்தின் ஆளுகையின் கீழ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் இயங்கும் மாவட்ட அலுவலகங்கள்** | |
| வேலூர்<br>ஆக்ஸிலியம் கல்லூரி சாலை,<br>(ஆக்ஸிலியம் கல்லூரி எதிரில்)<br>காந்தி நகர், வேலூர் – 632 006 | தொலைபேசி : 0416–2242700<br>மின்னஞ்சல்:<br>deetncbvlr2018@gmail.com |
| வாணியம்பாடி<br>பிளாட் எண். PP2, சிப்காட் தொழில் வளாகம்,<br>வாணியம்பாடி –635 751 | தொலைபேசி : 04174 – 224831<br>மின்னஞ்சல் :<br>tnpcb.vaniyambadi@gmail.com |
| ஓசூர்<br>பிளாட் எண். 140–A,<br>சிப்காட் தொழில் வளாகம், ஓசூர் 635 126 | தொலைபேசி : 04344–278922<br>மின்னஞ்சல்: deehosur@gmail.com |
| தர்மபுரி<br>பழைய எண் 64A, புதிய எண். 8, முதல் தளம்,<br>5வது குறுக்கு தெரு, அப்பாவு நகர்,<br>தர்மபுரி – 636 701 | தொலைபேசி : 04342–270005<br>மின்னஞ்சல்: deedmp2016@gmail.com |
| திருவண்ணாமலை<br>541/B, அசோக் நகர், வெங்கிக்கால், | தொலைபேசி : 04175–233118<br>மின்னஞ்சல் : jceechennai@gmail.com |

| | |
|---|---|
| திருவண்ணாமலை மாவட்டம்– 606 604 | |
| விழுப்புரம்<br>மாவட்ட ஆட்சியர் சிறப்பு திட்ட வளாகம்,<br>தாலுக்கா அலுவலகம் பின்புறம்,<br>விழுப்புரம் – 605 602 | தொலைபேசி : 04146–228955<br>மின்னஞ்சல் : deetncbvpm@gmail.com |
| **இணைதலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும் திருச்சி மண்டல அலுவலகம் (கண்காணிப்பு)** | |
| திருச்சி<br>எண். 25, டெவலப்டு பிளாட்ஸ்.<br>துவாக்குடி, திருச்சி – 632 015 | தொலைபேசி : 0431–2502020<br>மின்னஞ்சல்: jceetry@gmail.com |
| **திருச்சி மண்டல அலுவலகத்தின் ஆளுகையின் கீழ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் இயங்கும் மாவட்ட அலுவலகங்கள்** | |
| திருச்சி<br>எண். 25, டெவலப்டு பிளாட்ஸ்,<br>துவாக்குடி, திருச்சி– 620 015 | தொலைபேசி : 0431–2501558<br>மின்னஞ்சல்:<br>deetnpcbariyalur@gmail.com |
| அரியலூர்<br>எண், 99–A., எத்திராஜ் நகர், ரயில் நிலைய சாலை,<br>ராஜாஜி நகர் (PO). அரியலூர் – 621 713 | தொலைபேசி : 04329 – 221555<br>மின்னஞ்சல்:<br>deetnpcbariyalur@gmail.com |
| புதுக்கோட்டை<br>சிப்காட் தொழிற்பேட்டை,<br>திருவேங்கைவாசல், புதுக்கோட்டை – 622 002 | தொலைபேசி : 04322 – 244688<br>மின்னஞ்சல்:: deetnpcbtpdk@gmail.com |
| தஞ்சாவூர்<br>பிளாட் எண்.23, டி.எஸ்.எண்.3303/1,<br>சிப்காட் தொழில் வளாகம்,<br>நாஞ்சிக்கோட்டை சாலை,<br>உழவர் சந்தை எதிரில், தஞ்சாவூர், – 613 006 | தொலைபேசி : 04362–256558<br>மின்னஞ்சல்:<br>deetnpcbtanjore@gmail.com |
| கடலூர்<br>பிளாட் எண் A–3, சிப்காட் தொழில் வளாகம்,<br>குடிக்காடு, கடலூர்– 607 005 | தொலைபேசி : 04142–239867<br>மின்னஞ்சல்: deetnpcbcud@gmail.com |
| நாகப்பட்டினம்<br>எண். 14, பெருமாள் சன்னதி தெரு, | தொலைபேசி : 04365–221832<br>மின்னஞ்சல்: deetnpcbnagai@gmail.com |

| | |
|---|---|
| நாகப்பட்டினம் – 611 001 | |
| **இணைதலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும் கோயம்பத்தூர் மண்டல அலுவலகம் (கண்காணிப்பு)** | |
| கோயம்பத்துர்<br>பிளாட் எண்: E-55A, சிட்கோ தொழிற்பேட்டை,<br>பொள்ளாச்சி மெயின்ரோடு,<br>குறிச்சி, கோயம்பத்துார்– 641 021 | தொலைபேசி : 0422–2677007<br>மின்னஞ்சல்: jceecbe@gmail.com |
| **கோயம்பத்துர் மண்டல அலுவலகத்தின் ஆளுகையின் கீழ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் இயங்கும் மாவட்ட அலுவலகங்கள்** | |
| கோயம்பத்துார் (வடக்கு)<br>எண்,5, ராமசாமி நகர்,<br>தீயணைப்பு நிலையம் அருகில்,<br>கவுண்டம்பாளையம், கோயம்பத்துார் – 641 030 | தொலைபேசி: 0422 – 2444608. 2433826<br>மின்னஞ்சல்: tnpcbcbn@gmail.com |
| கோயம்பத்துார் (தெற்கு)<br>பிளாட் எண்.E – 55 A, சிட்கோ தொழிற்பேட்டை,<br>பொள்ளாச்சி பிரதான சாலை,<br>குறிச்சி, கோயம்பத்துார் – 641 021 | தொலைபேசி: 0422 – 2675608<br>மின்னஞ்சல்: tnpcbcbs@gmail.com |
| திருப்பூர் ( வடக்கு)<br>குமரன் வணிக வளாகம்,<br>குமரன் சாலை, திருப்பூர் – 641 601 | தொலைபேசி : 0421 – 2236210<br>மின்னஞ்சல்:<br>deetnpcbtpn2018@gmail.com |
| திருப்பூர் ( தெற்கு)<br>12A, பொள்ளாச்சி நெடுஞ்சாலை,<br>பல்லடம், திருப்பூர் – 641 601 | தொலைபேசி : 04255 – 252225<br>மின்னஞ்சல்: deetnpcbtprs@gmail.com |
| ஊட்டி<br>கூடுதல் ஆட்சியர் கட்டிடம், பிளாக் – II,<br>பிங்கர் தபால், நீலகிரி – 643 005 | தொலைபேசி : 0423 – 2443109<br>மின்னஞ்சல்: tnpcbooty@gmail.com |
| **இணைதலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும் சேலம் மண்டல அலுவலகம் (கண்காணிப்பு)** | |
| சேலம்<br>எண். 9, 4வது குறுக்கு தெரு, பிருந்தாவன் சாலை, பேஃர் லேண்ட், சேலம் – 636 016 | தொலைபேசி : 0427–2445526<br>மின்னஞ்சல்: jcee.pcbslm@gmail.com |

<table>
<tr><th colspan="2">சேலம் மண்டல அலுவலகத்தின் ஆளுகையின் கீழ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் இயங்கும் மாவட்ட அலுவலகங்கள்</th></tr>
<tr><td>நாமக்கல்<br>மாவட்ட ஆட்சியர் வளாகம், நுகர்பொருள் வாணிபக் கழகம், நாமக்கல் – 637 003</td><td>தொலைபேசி : 04286–280722<br>மின்னஞ்சல் :<br>tnpcbnamakkal@gmail.com</td></tr>
<tr><td>சேலம்<br>சிவா டவர், தபால்பெட்டி எண் 457, எண். 276, மெய்யனூர் பிரதான சாலை, சேலம் – 635 004</td><td>தொலைபேசி : 0427–2448526<br>மின்னஞ்சல்: deetnpcbslm@gmail.com</td></tr>
<tr><td>ஈரோடு<br>சிஎம்பி பிளாட், சிட்கோ தொழிற்பேட்டை, சின்னமலை சாலை, ஈரோடு– 638 001</td><td>தொலைபேசி : 0424–2271596 &<br>0424 –2272596<br>மின்னஞ்சல்: deetnpcbtrichy@gmail.com</td></tr>
<tr><td>பெருந்துறை<br>பிளாட் எண்து 2 (W), சிப்காட் வளைவு, கோவை பிரதான சாலை, ஓலப்பாளையம் போஸ்ட், பெருந்துறை – 638 052</td><td>தொலைபேசி : 04294 – 234288<br>மின்னஞ்சல்: deetnpcbpnd@gmail.com</td></tr>
<tr><td>கரூர்<br>எண். 26, ராமகிருஷ்ணபுரம் மேற்கு, கரூர் – 639 001</td><td>தொலைபேசி : 04324 – 230522<br>மின்னஞ்சல்: tnpcbkarur@gmail.com</td></tr>
<tr><td>குமாரபாளையம்<br>கதவு எண், 1–8/8, பெரியார் நகர், ராஜம் தியேட்டர் சாலை, ஓலப்பாளையம், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் – 638 183</td><td>மின்னஞ்சல்:<br>deetnpcbkmrplm@gmail.com</td></tr>
<tr><th colspan="2">இணைதலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும் மதுரைமண்டல அலுவலகம் (கண்காணிப்பு)</th></tr>
<tr><td>மதுரை<br>சிட்கோ தொழிற்பேட்டை, கப்பலூர், திருமங்கலம் தாலுக்கா, மதுரை – 625 008</td><td>தொலைபேசி : 0452–2489739<br>மின்னஞ்சல்: tnpcbjceemdu@gmail.com</td></tr>
<tr><th colspan="2">மதுரை மண்டல அலுவலகத்தின் ஆளுகையின் கீழ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் இயங்கும் மாவட்ட அலுவலகங்கள்</th></tr>
<tr><td>மதுரை<br>சிட்கோ தொழிற்பேட்டை, கப்பலூர்,</td><td>தொலைபேசி : 0452 – 2489738<br>மின்னஞ்சல்: tnpcbmdu@gmail.com</td></tr>
</table>

| | |
|---|---|
| திருமங்கலம் தாலுக்கா, மதுரை – 625 008 | |
| திண்டுக்கல்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திண்டுக்கல் – 624 004 | தொலைபேசி : 0451 – 2461868<br>மின்னஞ்சல்: deetnpcbdgl@gmail.com |
| சிவகங்கை<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>சிவகங்கை – 630 561 | தொலைபேசி : 04575 – 243903<br>மின்னஞ்சல்: tnpcbsvg@gmail.com |
| தேனி<br>எஸ். ஏ. ஆர். வளாகம், கதவு எண்.15/4, 12A–3.<br>நேஷனல் தியேட்டர் பின்புறம்,<br>தேனி மாவட்டம் – 625 531 | தொலைபேசி : 04546 – 264426<br>மின்னஞ்சல்: tnpcbtheni@gmail.com |
| ராமநாதபுரம்<br>கதவு எண்.1–1984, ஜோதி நகர், மாவட்ட ஆட்சியர்<br>அஞ்சல், சக்கரக்கோட்டை கிராமம், ராமநாதபுரம், | மின்னஞ்சல்: tnpcbrmd@gmail.com |
| **இணைதலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் இயங்கும் திருநெல்வேலி மண்டல அலுவலகம் (கண்காணிப்பு)** | |
| திருநெல்வேலி<br>பிளாட் எண். 30/2, சிட்கோ தொழிற்பேட்டை,<br>பேட்டை, திருநெல்வேலி – 627 010 | தொலைபேசி : 0462–2342931<br>மின்னஞ்சல்: jceetnv@gmail.com |
| **திருநெல்வேலி மண்டல அலுவலகத்தின் ஆளுகையின் கீழ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் இயங்கும் மாவட்ட அலுவலகங்கள்** | |
| விருதுநகர்<br>எண்23, மாஸ்டர் திட்ட பகுதி, சாத்தூர் சாலை,<br>ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் – 626 002 | தொலைபேசி : 04562 – 242442<br>மின்னஞ்சல்: deetnpcbvnr@gmail.com |
| தூத்துக்குடி<br>C7 & C9. சிப்காட் தொழில் வளாகம்,<br>மீளவிட்டான், தூத்துக்குடி– 628 008 | தொலைபேசி : 0461 – 2341298<br>மின்னஞ்சல்: deetnpcbttn@gmail.com |
| திருநெல்வேலி<br>30/2, சிட்கோ தொழிற்பேட்டை,<br>பேட்டை, திருநெல்வேலி – 627 010 | தொலைபேசி : 0462 – 2342931<br>மின்னஞ்சல்: deetnv@gmail.com |

| | |
|---|---|
| நாகர்கோவில்<br>எண்.318/46A, வாட்டர் டேங்க் சாலை,<br>நாகர்கோவில், கன்னியாகுமாரி மாவட்டம் – 629 001 | தொலைபேசி : 04652 – 229442<br>மின்னஞ்சல்:<br>tnpcbnagercoil@yahoo.co.in |
| **மேம்படுத்தப்பட்ட சுற்றுச் சூழல் ஆய்வகங்கள்** | |
| சென்னை<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய கட்டிடம்,<br>75. மவுண்ட் சாலை, கிண்டி,<br>சென்னை – 600 032 | தொலைபேசி: 044 – 22301598<br>மின்னஞ்சல்: aelchennai4@gmail.com |
| மதுரை<br>சர்வே எண். 668 & 669. சிட்கோ தொழிற்பேட்டை,<br>கப்பலூர், திருமங்கலம் தாலுக்கா,<br>மதுரை – 625 008 | தொலைபேசி: 0452 – 2489497<br>மின்னஞ்சல்:aeltnpcbmadurai@yahoo.co.in |
| சேலம்<br>1/276, சிவா டவர், மெய்யனூர் பிரதான சாலை,<br>சேலம் – 635 004 | தொலைபேசி: 0427 – 2448054<br>மின்னஞ்சல்: tnpcbaeslm@dataone.in |
| கடலூர்<br>பிளாட் எண். A-3, சிப்காட் தொழில் வளாகம்,<br>குடிக்காடு, கடலூர்– 607 005 | தொலைபேசி : 04142 – 239332<br>மின்னஞ்சல்: aeltnpcbcud@gmail.com |
| கோயம்பத்தூர்<br>136 – D , ஸ்வாமி ஐயர் நியூ தெரு,<br>கங்கா தோட்டம், கோயம்பத்தூர் – 641 001 | தொலைபேசி : 0422 – 2440174<br>மின்னஞ்சல்: deltnpcbcbe@dataone.in |
| திருநெல்வேலி<br>30/2, சிட்கோ தொழிற்பேட்டை,<br>பேட்டை, திருநெல்வேலி – 627 010 | தொலைபேசி : 0462 – 2342919<br>மின்னஞ்சல்: :deltnpcb@rediffmail.com |
| திருச்சி<br>எண். 25, டெவலப்டு பிளாட்ஸ்,<br>சிட்கோ தொழில் வளாகம், துவாக்குடி,<br>திருச்சி– 620 015 | தொலைபேசி : 0431 – 2501457<br>மின்னஞ்சல்:: deltnpcbtry@gmail.com |
| வேலூர்<br>ஆக்ஸிலியம் கல்லூரி சாலை,<br>காந்தி நகர், வேலூர் – 632 006 | தொலைபேசி : 0416 – 2247906<br>மின்னஞ்சல்: delvlr2011@gmail.com |

| மாவட்ட சுற்றுச் சூழல் ஆய்வகங்கள் | |
|---|---|
| அம்பத்தூர்<br>77–A, தெற்கு நிழற் சாலை,<br>அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர்,<br>சென்னை – 600 058 | தொலைபேசி: 044 - 26880560<br>மின்னஞ்சல்: delambtnpcb@gmail.com |
| ஒசூர்<br>பிளாட் எண். 149–A, முதல் தளம்,<br>சிப்காட் தொழில் வளாகம்,<br>தர்கா அருகில், ஒசூர் – 635 126 | தொலைபேசி : 04344 – 278885<br>மின்னஞ்சல்: tnpcbdelhosur@gmail.com |
| திருப்பூர்<br>இரண்டாவது தளம், குமரன் வணிக வளாகம்,<br>குமரன் சாலை, திருப்பூர் – 641 601 | தொலைபேசி : 0421 – 2244876<br>மின்னஞ்சல்: tiruppurlab@gmail.com |
| திண்டுக்கல்<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>திண்டுக்கல் – 624 004 | தொலைபேசி : 0451 – 2461891<br>மின்னஞ்சல்: deldgl@yahoo.co.in |
| தூத்துக்குடி<br>C7 & C9, சிப்காட் தொழில் வளாகம்,<br>மீளவிட்டான், தூத்துக்குடி– 628 008 | தொலைபேசி : 0461 – 2340810<br>மின்னஞ்சல்: deltnpcbtut@gmail.com |
| அரும்பாக்கம்<br>தரை தளம், 950/1, பூந்தமல்லி நெடுஞ்சாலை,<br>அரும்பாக்கம், சென்னை – 600 106 | தொலைபேசி : 044 – 26223522<br>மின்னஞ்சல்: delmanali@gmail.com |
| மறைமலைநகர்<br>மறைமலை அடிகளார் தெரு.<br>நகராட்சி அலுவலகம் அருகில்,<br>மறைமலைநகர், சென்னை – 603 209 | தொலைபேசி : 044 – 27454004<br>மின்னஞ்சல்: delmmnagar@gmail.com |
| பெருந்துறை<br>பிளாட் எண். J 2 (W), சிப்காட் வளைவு, கோவை<br>பிரதான சாலை, ஒலப்பாளையம் போஸ்ட்,<br>பெருந்துறை – 638 052 | தொலைபேசி : 04294 – 234388<br>மின்னஞ்சல்: perundurailab@gmail.com |

**11. சாதனைகளின் நிலை**

**28.02.1982** முதல் **31.01.2020** வரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆற்றிய சாதனைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| **1. நிறுவுவதற்கான இசைவாணை வழங்குதல்** | | |
| அ | நீர் விதியின் கீழ் | 23197 தொழிற்சாலைகள் |
| ஆ | காற்று விதியின் கீழ் | 23197 தொழிற்சாலைகள் |
| **2. இயக்குதலுக்கான இசைவாணை வழங்குதல்** | | |
| அ | நீர் விதியின் கீழ் | 53777 தொழிற்சாலைகள் |
| ஆ | காற்று விதியின் கீழ் | 53777 தொழிற்சாலைகள் |
| **3. சட்ட நடவடிக்கைகள்** | | |
| அ | முகாந்திரம் கோரி கடிதம் அனுப்பப்பட்டது | 106931 தொழிற்சாலைகள் |
| ஆ | மூடுதலுக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது | 13292 தொழிற்சாலைகள் |
| இ | நீர் சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டவை | 321 |
| ஈ | காற்று சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டவை | 134 |
| **4. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் துவங்கப்பட்டது** | | |
| அ | தோல் தொழிற்சாலைகள் | 13 |
| ஆ | ஜவுளி சாய தொழிற்சாலைகள் | 20 |
| இ | ஓட்டல்கள் மற்றும் விடுதிகள் | 1 |
| ஈ | மின்முலாம் பூசும் தொழிற்சாலைகள் | 2 |
| **5. தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மேலாண்மை** | | |
| அ | கண்டறியப்பட்ட தொழிற்சாலைகள் | 3611 |
| ஆ | அங்கீகாரம் வழங்கப்பட்டவை | 3611 |
| இ | பொது சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றத்திற்கான இடம் கண்டறியப்பட்டவை | 2 |
| ஈ | இயக்கத்திலுள்ள TSDF | 2 |
| **6. ஆறுகள் மற்றும் ஏரி கண்காணிப்பு (மனித)** | | |
| அ | சென்னை மாநகர நீர் வழிகள் | 19 |
| ஆ | காவேரி | 33 |
| இ | தாமிரபரணி | 12 |
| ஈ | பாலாறு | 1 |
| உ | வைகை | 1 |

| | | |
|---|---|---|
| ஊ | ஏரி | 8 |
| எ | தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டம் | 51 |
| **7. தொடர் நீர்தர கண்காணிப்பான்கள் (தானியங்கி)** | | |
| அ | காவேரி | 3 |
| ஆ | பவானி ஆறு | 2 |
| இ | தாமிரபரணி ஆறு | 3 |
| **8. சுற்றுப்புற காற்றின் தன்மை கண்காணித்தல் (மனித)** | | |
| அ | சென்னை | 8 |
| ஆ | திருச்சிராப்பள்ளி | 5 |
| இ | கோயம்புத்தூர் | 3 |
| ஈ | தூத்துக்குடி | 3 |
| உ | மதுரை | 3 |
| ஊ | சேலம் | 1 |
| எ | மேட்டூர் | 2 |
| ஏ | கடலூார் | 3 |
| **9. தொடர் சுற்றுச்புற காற்று தர கண்காணிப்பு (தானியங்கி)** | | |
| அ | சென்னை | 4 |
| ஆ | கும்மிடிப்பூண்டி | 1 |
| இ | தூத்துக்குடி | 1 |
| ஈ | மணலி | 1 |
| உ | கோயம்புத்தூர் | 1 |
| ஊ | பெருங்குடி | 1 |
| எ | நடமாடும் வேன் | 1 |
| **10. தொடர் சுற்றுப்புற ஒலி கண்காணிப்பு** | | |
| அ | சென்னை | 10 இடங்கள் |
| **11. சுற்றுச்சூழல் பயிற்சி மையம்** | | |
| அ | பயிற்சிகள் நடத்தப்பட்டவை | 661 |
| ஆ | பயிற்சி பெற்றோர் | 28807 |

மேலும் விவரங்களுக்கு காண்க – தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய இணையதளம்–

www.tnpcb.gov.in